36ந

உ



சுபமஸ்து.

# தமிழகம்.

வால்யூம் 1 | 1905௵ டிஸம்பர் ௴ | நம்பர் 12.

## வாரங்களும் அவைகளின் பெயரும்.

வெகு நாளாய் நம் வழக்கத்தில் ஒரு வாரம் என்னும் கால மாநத்தின் உட்பிரிவும், அந்தவாரம் என்பது ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சநி, என்னும் ஏழு பெயர்களுள்ள ஏழு நாள்களால் ஆனது என்றும் இருப்பது யாருக்கும் தெரிந்ததுதான். இதுவும் அன்றி இந்த ஏழு பெயர்களும், சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், குரு, சுக்கிரன், சநி என்கிற ஏழு ஜோதிஷ சாஸ்திரத்தில் ஏற்பட்டுள்ள ஏழு கிரஹங்களின் பெயர்கள் என்றும் நாம் எலலாரும் அறிந்திருக்கிறோம் அல்லவா ?

மேலே சொன்னதைக்கொண்டு படித்தவர்கள் ஊகிக்க வேண்டியது என்னவென்றால், இந்த வாரத்தினுள்ளமைந்த இந்த ஏழுநாள்களுக்கும் உள்ள வரிசைக்கிரமத்துக்குக் காரணம் ஜோதிஷ ச்ாஸ்திரத்தைக் கொஞ்சம் ஆராய்ந்தால் தெரிந்துவிடும் என்பத்தான்.

நமது பழைய ஸம்பிரதாயமாகிய ஐரோப்பிய சாஸ்திரிகள் "தாலமி சாஸ்திரி கோட்பாடு" என்னும் ஜோதிஷசித்தாந்தப்

படிக்கு பூமி நிலைநிற்கிற தென்றும், மேலே சொன்ன எழுகிரஹங்களும்பூமியைச் சுற்றுகின்றவென்றும்,ஒரு கிரஹத்தைவிட இன்னொரு கிரஹம் விலகியே சலிக்கிறதென்றும், ஒவ்வொன்றும் தன்தன் விஷமவிருத்தமான மார்க்கத்தில் (orbits) சலித்துக்கொண்டு வருகிற தென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

அவைகளை ("சீக்ரக்ரமம்" அதாவது) அவை ஒரு தடவை சுற்றிவருகிறதற்கு ஆகும் அவகாசம் எவ்வளவோ அந்த மேரைக்கு வரிசைக்கிரமமாய் ஜாஸ்தியான காலம் ஆகும் கிரஹத்தை முதலில் வைத்து எழுதினால் பின்வருமாறு சலிக்கின்றனவென்று யாரும் அறியலாம்.

(1) சனி
(2) குரு (வியாழன்)
(3) அங்காரகன் (செவ்வாய்)
(4) சூரியன் (ஞாயிறு)
(5) சுக்கிரன் (வெள்ளி)
(6) புதன்
(7) சந்திரன் (திங்கள்)

(இப்போது சொல்லிய விஷயத்தில் சூரியனுக்குப் பதிலாக பூமியைநினைத்துக்கொண்டால் இந்த வரிசை பள்ளிக்கூடப் பிள்ளைகள் யாவர்க்கும் தெரிந்தது தான்.)

ஒரு நாள் என்பது ஒரு பகல் ஒரு இரவு இரண்டும் சேர்ந்து ஆனதாம். அந்தக் காலத்தை 24 சமபாகங்களாகப் பிரித்து ஒவ்வொன்றிற்கும் ஹோரை (Hour) என்று பெயரிட்டிருக்கிறார்கள். அந்த ஒவ்வொரு ஹோரைக்கும் அதிஷ்டாநதேவதையாக மேலே சொன்ன வரிசைப்படிக்கு ஒவ்வொரு கிரஹத்தை ஏற்படுத்திவைத்திருக்கிறார்கள்.

சனிஹோரை முதல்ஹோரையானால் அன்றைத்தினத்திற்கு சனிக்கிழமை என்றும் சனிவாரம் என்றும் பெயர் வைத்திருக்கிறார்கள். அதே தினத்தில் காலை முதல் ஹோரையிலிருந்து 7-வது ஹோரைவரைக்கும் முறையே சனி, குரு, அங்காரகன் முதலிய எழுகிரஹங்களையும் அதிஷ்டாநதேவதையாக வைத்துக்கொள்ளவேண்டும். பிறகு இன்னொரு தடவை 8-வது ஹோரை முதல் 14-வது ஹோரைவரைக்கும் அதே முறையாக அதிஷ்டாநதேவதையிருப்பதாயும், மற்றும் ஒருதடவை 15-வது ஹோரைமுதல் 21-வது ஹோரைவரைக்கும் அதே விஷயத்தைத் திருப்பிக்கொள்ளவேண்டும் என்றும் சொல்லு

கிருர்கள்: ஆகவே 22-வது ஹோரை சநிஹோரையாம். 23 வது 24-வது ஹோரை முறையே குருஹோரை அங்காரக ஹோரையாம்.

அடுத்த ஹோரையான 25-வதும், அடுத்த நாளின் முதல் ஹோரையானதுமான அந்த ஹோரை சூரியஹோரையாகிறது. அன்றைத்தினத்தின் முதல் ஹோரை சூரியஹோரையானதால் அதற்கு சூரியவாரம் அல்லது ஞாயிற்றுக்கிழமை எனப்பெயர் கொடுக்கலாயிற்று.

இவ்விதமாக அடுத்த நாளுக்கு திங்கட்கிழமை என்றும், அடுத்துவரும் நாள்களுக்கு, செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை, சநிக்கிழமை என்னும் கிரமம் சுற்றிச்சுற்றி வருகிறது என்று பார்த்துக்கொள்ளலாம்.

இப்படிச் சுற்றிச் சுற்றி வந்தாலும் சூரியன் எல்லாக்கோளங்களிலும் பெரிதானதால், ஞாயிற்றுக்கிழமையை முதலில் வைத்து ஏற்பாடு செய்திருக்கிருர்கள்.

**P. S. ஸுந்தரம் அய்யர், B. A. L. T.**

---

# பூகம்பமும் எரிமலையும்.

(229-ம் பக்கத் தொடர்ச்சி.)

பூமியின் சுற்றளவு சுமார் 25,000 மைல் என்றும் அதை ஊடுருவிச் செல்லுங் குறுக்களவு சுமார் 8,000 மைல் என்றும் பூகோள்சாஸ்திர வல்லவர்கள் கண்டறிந்திருக்கிருர்கள். ஆதலால் அக்குறுக்களவின் மத்தியபாகம் பூமியின்மேற்புறத்தினின்று 4,000 மைல் ஆழத்தில் அமைந்திருக்கின்றது. அதுவே பூமியின் மத்தியபாகம். 5,280 அடி ஆழமுள்ள சுரங்கங்களின் அடிப்புறத்தின் தூரத்தையும், பூமியின் மத்திய பாகமிருக்கும் தூரத்தினளவையும் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்தில் ஒன்றுக்கு நாலாயிரமாகக் காணப்படுகின்றது. சுரங்கங்களின் அடிப்பாகம் பூமியின் மேற்புறத்திற்கு மிகச்சமீபத்திலிருந்தபோதிலும் உஷ்ணத்தின் மிகுதி நன்கு விளங்குகின்றது. ஆதலால் பூமியின் மேற்புறத்தினின்றும் சிலமைல் ஆழங்களில் பூமியின்

களுள்ள உஷ்ணம் பூமியிற் பதிந்து கிடக்கும் வஸ்துக்களை உருகும்படி செய்யக்கூடியதென்று ஊகிக்கக்கூடியதாயிருக்கிறது. திடவஸ்துக்கள் உருகுந்தருவாயில் அதிக பளுவான வேறு வஸ்துக்கள் அவைகளை அழுத்துவதால் உருகுவது சற்றுத் தடைப்படுமென்பது வாஸ்தவமே. பூமியின் மேற்புறத்திலுள்ள கல், மண், மரம் ஆகிய பலவஸ்துக்களும் அதனுட்புறத்திலுள்ளவைகளை நெருக்கிக்கொண்டிருக்கின்றன. பூமியின் மேற்புறத்தினின்றும் ஆழத்திற் செல்லச்செல்ல மேலுள்ள வஸ்துக்கள் கீழுள்ள வஸ்துக்களை நெருக்கி அழுத்துகின்றன என்பது யாவருக்கும் எளிதில் தெரிந்த விஷயமே. இப்படி இவைகள் எல்லாம் அழுத்திக்கொண்டிருந்தபோதிலும் பூமியின் அடிப்புறத்தில் வஸ்துக்கள் எல்லாம் உருகிய தன்மையுள்ளவைகளாயிருக்கின்றனவென்று எரிமலைகளின் கற்குழம்பு நமக்குத் தெரிவிக்கின்றது.

பூமியின் கீழ் உஷ்ணம் உண்டு என்பதற்கு வேறொருமுகாந்தரம் உண்டு. மிக ஆழத்திலிருந்து வருகிற ஊற்றுகளின் நீர் உஷ்ணமாகவே இருக்கின்றன. நமது தேசத்தில் கிணறு, குளங்கள் வெட்டுங்காலங்களில் ஒரு பெரிய நீர்ச்சுரங்கம் அகப்பட்டால் அதைப்புண்ணிய தீர்த்தமாகிய பாதாளகங்கையென்று சொல்வார்கள். அவைகளில்ஸ்நானம்செய்தால்தங்கள் பாவங்களைப்போக்குமென்று சொல்லி அவைகள் இருக்குமிடங்களிற் சென்று ஸ்நானம் செய்வார்கள். அந்நீர் பாவத்தைப்போக்கும் போக்காது என்று நான் சொல்லமுடியாது. ஆனல் அத்தண்ணீர் பூமியின்கீழுள்ள பலவித உலோகங்களோடு சேர்ந்திருந்தமையால் அதில் ஸ்நானம் செய்கிறவர்களின் சரீரங்களில் பலநாள் குடிகொண்ட வியாதிகளை அது போக்குமென்று வைத்திய நூல்களிற் கூறப்பட்டிருப்பதுமல்லாமல் தற்காலங்களில் அவ்வித ஊற்றுகளில் ஸ்நானம்செய்து நோய் தீர்ந்து தேகசௌக்கியமடைந்தவர்களும் அநேகர். இங்கிலாந்தில் இவ்வித ஊற்றுகள் அநேகம் உண்டு. அவைகளில் முக்கியமானவைகள்—பாத், சல்டன்ஹாம், ஸ்கார்பரோ, மாட்லாக் என்ற இடங்களில் உள்ளவைகளே. தினம் அவைகளில் நீராட அநேகர் செல்லுகிறார்கள். அப்படிச் செல்லுகிறவர்களிற் பெரும்பாலார் வியாதியாற் பீடிக்கப்பட்டவர்

களே. அநேகர் தேக சௌக்கியம் அடைகிறார்கள் என்று கேள்வி. இங்கிலாந்திலுள்ள ஊற்றுகளில் வியாதிகளைப்போக்கப் பேர்பெற்ற ஊற்றுகள் பாத் என்னும் நகரிலுள்ளவைகளே. அவ்வூற்றுகளில் சில உஷ்ணமானவைகள். பாரன்ஹீட் என்பவர் கண்டுபிடித்த உஷ்ணமறியுங்கருவியின்படி அச்சுரங்கங்களின் நீர் 120 டிகிரி உஷ்ணமுள்ளவைகளென்று கண்டறிந்திருக்கிறார்கள். வேறு தேசங்களிலும் நீரூற்றுகள் உண்டு. அவைகளிற் சில உஷ்ணமானவைகளே. இத்தாலியாதேசத்திற்கும் ஸ்விட்ஸர்லாண்டு தேசத்துக்கும் புதிதாக ஒரு ரயில் பாதைபோட எத்தனித்து மத்தியிலுள்ள ஆல்ப்ஸ் என்னும் மலையைக் குடைந்ததில் உஷ்ண ஊற்று குறுக்கிட்டதென்றும் அதனால் அந்த வேலை முடியக்கொஞ்சம் தாமதப்பட்டதென்றும் பிறகு அந்த ரயில்வே கம்பனியார் அந்த உஷ்ண ஊற்றின் நீரைக் குழாய்களின் வழியாய் வெளியே விடுத்து வழியைக் குடைந்து விட்டார்களென்றும் பத்திரிகைகளின் மூலமாய்த் தெரிந்திருக்கிறோம். அப்படிக் குடைந்த பாதைக்கு ஸிம்ப்ளன் டனல் என்று பெயர். மேலும் எரிமலை மிகுந்த பிரதேசங்களிலுள்ள உஷ்ண ஊற்றுக்களின் நீர் ஆவியாகக்கூடிய அவ்வளவு உஷ்ணத்தை அடைந்த தன்மையுள்ளதென்று தெரியவருகிறது. உஷ்ண ஊற்றுகளில் மிகப்பேர்பெற்றவைகள் ஐஸ்லாண்டு தீவில் உள்ளவைகளே. அத்தீவு ஐரோப்பாவிற்கும் அமேரிக்காவிற்கும் மத்தியிலுள்ள அத்லாந்திக் மஹாசமுத்திரத்தின் வடக்கிலுளது. அத்தீவிலுள்ள உஷ்ண நீர்ச்சுரங்கங்களுக்கு கேய்ஸர்ஸ் (Geysers) என்று பெயர். அவைகளினின்றும் நீராவி மிகுதியாய்க் கொதிக்கும் நீரின் சப்தத்தோடு அதிவேகமாகச் செங்குத்தில் ஆகாயத்தில் வெகு வேகமாகத் தள்ளப்படும். சற்றுவேகங்குறைந்து நிற்கும். பிறகு அதிவேகமாக மேலே பாய்ந்து நாலாபக்கங்களிலும் விழும். சில சமயங்களில் அவைகளின் நீர் காற்றின் நிலைமைக்கேற்பத் துளிகளாகவும், தாரைகளாகவும் மாற்றப்படும். அந்நீரில் சக்கிமுக்கிக் கற்கள் அதிகமாகக் கலந்திருக்கின்றன. அவைகள் நீருடன் வெளிப்படும்போது நீர் வருந் துவாரத்தின் நாலாபக்கங்களிலும் படிந்து அத்துவாரத்தின் பக்கங்களை உறுதிப்படுத்துகின்றன. ஐஸ்லாண்டு தீவிலுள்ள உஷ்ணநீர் ஊற்றுகளுக்கு கேய்ஸர்ஸ் என்று பெயரிருந்தபோதிலும் அதேவித உஷ்ணநீர்

ஊற்றுகள் ஆசியாவிற்குத் தெற்கிலுள்ள இந்துமஹாசமுத்திரத்திலுள்ள தீவுகளிற் பெரிதானதும் கண்டங்களிற் சிறிதென்றும் சொல்லக்கூடியதுமான ஆஸ்திரேலியாவிற்குத் தென்கிழக்கிலுள்ள நியூஸீலெண்டு என்னுந் தீவுகளிலும், வட அமேரிக்காவிலுள்ள ராக்கிமலைப் பிரதேசங்களிலும், இன்னும் பலவிடங்களிலும் காணப்படுகின்றன. வட அமேரிக்காவில் ஒரு தேசமாகிய ஐக்கியநாட்டிலுள்ள கோலராடோ என்னும் மாகாணத்தில் இருக்கிற எல்லோஸ்டோன் என்று பேர்வாய்ந்த சிங்காரத் தோட்டத்தில் 10,000 த்திற்குக் குறையாமல் உஷ்ண ஊற்றுகளாகிய கேய்ஸர்ஸ களும் உஷ்ணதடாகங்களும் இருக்கின்றனவென்றும், அவைகளில் மிகப்பேர்பெற்ற ஒரு நீரூற்றினின்றும் நீர் 200 அடிக்குமேலெழும்பியுயர்ந்து விழுகின்றதென்றும் ஒருவர் எழுதி இருக்கிறார்.

சில விடங்களில் பூமியின் கீழ்நின்றும் உண்டாகின்ற உஷ்ணநீர்ச் சுரங்கங்களின் தண்ணீர் மண், இரும்பு முதலிய பொருள்களுடன் கலந்தவையாயிருக்கின்றன. அவைகள் ஊற்றுகளின் முகத்துவாரங்களில் படிவதால் ஒரு சர்க்கரைப் பொட்டணத்தின் வடிவம்போல அமைகின்றன. அவைகளுக்கு ஸால்ஸேஸ் (Salses) அல்லது மண் எரிமலை யென்று பெயர். இம்மாதிரியான ஊற்றுகள் உலகிலுள்ள ஏரிகளில் மிகப்பெரியதாயும் கடலெனப்பேர்பெற்றதுமாகிய காஸ்பியன் கடற்கரையோரங்களிலும் ஐரோப்பாவிலுள்ள ருஷ்யராஜ்யத்தின் ஒரு பகுதியாகிக் கருங்கடலிற் பொருந்திய தீபகற்பமாகிய கிரிமியாவிலும் காணலாம். வேறு சில இடங்களில் பூகம்பத்தால் பூமியில் உண்டாகிய வெடிப்பினின்றும் நீராவி மிக வந்துகொண்டிருப்பதைப் பார்க்கலாம்.

இத்தாலியா தேசத்தில் மிக அழகுவாய்ந்ததும், உலகத்திலுள்ள ஒவ்வொருவரும் இறப்பதற்கு முன் பார்க்கவிரும்பத் தகுந்ததுமான மிக நாகரீகமடைந்த நேபிள்ஸ் நகரத்தின் அருகிலுள்ள ஸல்படேரா (Selfatara) என்ற இடத்திலுள்ள பூமியின் பிளப்பினின்றும் உஷ்ண நீராவிவரப்பார்க்கலாம். அவ்வித நீராவியில் கந்தகம் மிகக்கலந்திருக்கின்றது. அந்த இடங்களில் பலவிதந் தொழில்கள் நடந்தேறிவருகின்றன. அந்த நீராவியில் வெங்காரப்புளிப்பு கலந்திருப்பதால் அதினின்றும் வெங்காரம் எடுக்கிறார்கள்.

மேலே எடுத்துக் காட்டியவைகள் எல்லாம் எரிமலை கற்குழம்பைக்கக்கிய பிறகு பின்னடைந்த சின்னங்களேயாம். ஓரிடத்திலுள்ள எரிமலைகளின் தொழில்கள் முற்றிலுமடங்கி விட்டால் பூமியின்கணுள்ள உஷ்ணம் உஷ்ண ஊற்றுகளாக அமையுமென்று சில சாஸ்திரவல்லவர்கள் கூறுகிறார்கள். இதற்கிணங்க மத்திய அமேரிக்காவிலுள்ள மவுண்டு ஆக்குவா (Mount Agua) என்னும் எரிமலை கற்குழம்பையும் சாம்பலையும் கக்காது மண்ணையும் நீரையுமே கக்குகின்றது. இப்போது அடங்கியது போலக் காணப்படும் பல எரிமலைகள் முற்றிலும் அடங்கிவிட்டவைகளல்ல. அதிக உக்கிரத்தோடு மிகக்கற்குழம்பை எப்போதாவது கக்கவுங்கூடும். இதற்குத் திருஷ்டாந்தமாக முன் ஒரு சஞ்சிகையில் இத்தாலியாதேசத்திலிருக்கின்ற விஸூவியஸ் என்னுமலையை எடுத்துக்காட்டி இருக்கிறேன்.

எரிமலைக்கும் பூகம்பத்திற்கும் ஒற்றுமை உண்டென்று முன்னமே கூறியிருக்கிறேன். அதற்கிணங்க ஒரு உதாரணங் கூறுகிறேன். மத்திய அமேரிக்காவில் ஸான்ஸேல்விடார் என்றோர் நாடு இருக்கிறது. அந்நாட்டில் கோலம்பஸ் அமேரிக்கா தேசத்தைக் கண்டு பிடித்தகாலத்திற்குச் சற்றுப்பின்னர் ஸ்பேயின் தேசத்தார்கள் குடியேறினர்கள். அவர்கள் அங்கு குடியேறிய கொஞ்சகாலத்திற்குள் எரிமலைக்கும் பூகம்ப அதிர்ச்சிக்கும் சம்பந்தம் உண்டு என்பதை அறிந்தார்கள். எப்படியெனில் அவ்விடத்திலுள்ள ஹபாங்கோவின் (Hapango) கிரேட்டரிலமைந்த ஓர் ஏரியின் நீர் ஓர் குறிப்பிட்ட அடையாள உயரத்திற்கு மேல் அதிகப்படும்போதெல்லாம் பூகம்பம் நேரிட்டது. அந்த கிரேட்டரில் உள்ள ஏரியின் நீரினது உயர்ச்சி குறித்த அளவிற்கு மேற்படாமலிருப்பதற்கும் பூகம்பம் நேரிடாமல் இருப்பதற்கும் அதினின்றும் அதிகநீர்வெளியேறக் கால்வாய் ஒன்று வெட்டிவைத்தார்கள். அது முதல் ஒரு நூற்றாண்டிற்கு அவ்விடத்தில் பூகம்பம் என்பதே நேரிடவில்லை. பிறகு வந்தவர்களின் கவனிப்புக் குறைவுபட்டதாலும் வாய்க்கால் வாயும் அடைபட்டதாலும் அக்கிரேட்டரில் அமைந்துள்ள ஏரியின் நீர் குறித்த அளவிற்குமேல் நிறைந்தது. அதனால் ஒரு பெரிய பூகம்பம் நேரிட்டு அந்நாட்டை மிக அலங்கோலம் செய்தது. அதேதருணத்தில் அம்மலையின்

கிரேட்டர் கற்குழம்பைக் கக்கியதால் அதன்கணவமைந்த எரி இருந்த இடம் தெரியாமல் அழிந்தது. இதனுல் பூகம்பத் திற்கும் எரிமலைக்கும் ஒருவித சம்பந்தம் உண்டென்பது உள் ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறது. வேறுசில சாஸ் திரவல்லவர்கள் சூரியசந்திர கிரகணம் நேரிடும்போதெல்லாம் பூகம்பம் உண்டாகும் என்று அதற்குப் பல ஹேதுக்களை எடுத்துக் காட்டுகிறூர்கள். அவைகளை எடுத்துக் காட்டிக் கூறுவது அசாத்தியமாதலால் இத்துடன் இவ்விஷயம் முடிக் கலாயிற்று.

(*Culled from various sources by*)

**K. இராமாநுஜ ஐயங்கார்.**

---

# தேவதத்தன் சரிதம்.

(262-ம் பக்கத்தொடர்ச்சி).

மடத்திற்குப் போனுல் வில்லனீவ் மடாதிபதி அநுமதிகொடா ரென்று அஞ்சி மனிதர் சஞ்சாரமில்லாத ஒரு இடம்பார்த்துக் கரையேறி ஸெயின்று ஸ்டீபன் என்னும்மலைக்கோயிலுக் குப் போய் தெய்வசந்நிதியில் வெற்றிதரும்படி வேண்டிக் கொண்டு வெளிக்கிளம்பி தன் பின்னேடுவந்த சேவகர் கள் இருவரையும் அங்கேயே இருக்கச்செய்து தனக்குப் பிராணஹானிவந்தால் நடந்ததை இஷ்டமித்திர பந்துஜனங் களுக்குத் தெரிவிக்கச் சொல்லிவிட்டுப் பாம்போடு போர்புரிவ தற்காக முன்னிட்டுப்போனுன். அதன் உறைவிடமான சதுப் பு நிலத்தின் பக்கமாக தேவதத்தன் குதிரையேறிச்சென்றுன். கொஞ்சநேரத்திற்கெல்லாம் இவன் வரத்தைக்கண்டு பாம்பு சீறிச்சினந்து பயங்கரமான பற்களைக் காட்டிக்கொண்டு ஓடி வந்தது. தேவதத்தன் முன்னெருதடவை பாம்பை சந்தித்த வனுதலால் அஞ்சாமல் நாய்களைத் தூண்டிவிட்டுக்கொண்டு குதிரைமேலிருந்தபடி ஈட்டியுங் கையுமாக அதைத் தாக்கி னுன். குதிரை பாம்பின் உருவாரத்திற்கும் மெய்யான பாம்பிற்கும் உள்ள வித்தியாசம் தெரிந்து பின்னிடைந்து ஓட

ஆரம்பித்தது. தேவதத்தன் குதிரையினின்று கீழே குதித்து நின்றபடியே ஈட்டியால் தாக்க ஆரம்பித்தான். அதற்குள் நாய்கள் மாத்திரம் உறுதியாக நின்று பாம்பை எதிர்த்தன. தேவதத்தனும் பக்கத்தில் வருவதைக்கண்டு பாம்பு நாய்களிடத்திலிருந்து திரும்பி தேவதத்தனைக் கடிக்கப்போயிற்று. அவன் சுழன்று சுழன்று வருகையில் கடிக்க வாய்க்காமல் தன் செதிள்கள் நிறைந்த வாலால் அவனை அடித்தது. இப்படிச் செய்கையில் பாம்பின் மிருதுவான பாகமான வயிறு நாய்களுக்கு அகப்பட்டது. நாய்கள் கிடைத்த பிடியை விடாது கடித்துக் கிழித்து ராக்ஷஸ ஸர்ப்பத்தைக் கொன்றன. இந்த சந்தர்ப்பத்தில் மலைமேலிருந்த சேவகர்கள் சும்மாயிருக்க மனம்பொறாமல் போர்நடக்கும் இடத்திற்குப் போய்ப் பார்த்தார்கள். செத்துக்கிடந்த பாம்பினருகே உதிரஞ்சேர்ந்த வாயினவாக நாய்கள் நின்றன. செத்த பாம்பின் உடலின் கீழ் வாலால் அடியுண்ட வீர விரதக்காரனான தேவதத்தன் மூர்ச்சித்துகிடந்தான். சேவகர்கள் தங்கள் எஜமானனை வெளிப்படுத்தி தண்ணீர் கொண்டுவந்து முகத்தில் தெளித்து மூர்ச்சை தெளியும்படி செய்தார்கள். பிறகு வண்டிகள் தருவித்து கொல்லப்பட்ட ராக்ஷத ஸர்ப்பத்தை ஒன்றில் ஏற்றிக்கொண்டு மற்றவைகளில் ஜனங்கள் ஏறிக்கொண்டு ஜயகோலத்தோடு சாமியார் மடத்துக்குப்போய்ச் சேர்ந்தார்கள். வழியில் ஊர்ஜனங்களெல்லாம் வெற்றிபெற்று வீரவிரதத்தை நிறைவேற்றிய தேவதத்தனை உபசரித்து ஆரவாரத்துடன் புகழ்ந்து அவனுடன் உள்ளே பிரவேசித்தார்கள்.

யாருக்கும் திகில்விளைவித்த கொடும் பாம்பைக் கொன்ற வீரதீரன் சாமியார் கட்டளையைக் கேட்காமல் நடந்ததற்காக அச்சாமியார் வருத்தப்படார் தேவதத்தனை மன்னித்து விபந்துகொள்வாரென்று யாவரும் எண்ணினார்கள்.

ஆனால் மகாகண்டிப்பான போர்வீரச் சந்நியாசியாரான வில்லனீவ், தேவதத்தன் வந்து முழந்தாட்படியிட்டு வணங்கியும், மனமிரங்காது கடுமையான குரலுடன் அவனைப் பார்த்து "தம்பி நீ என்ன தீரச்செயலைச் செய்தால்தான் என்ன? உன் மடாதிபதியின் சொற்கேளாத குற்றத்திற்காக, உன் தவவேடத்திற்குரிய ஆடைகளையும் கௌரவசின்னங்களையும் களைந்

தெரிந்துவிட்டு மடத்தின் எல்லையைவிட்டுப் போகக்கடவை'', என்றார்.

அருகில் நின்ற ஜனங்களெல்லாம் "ஓ! இது அநியாயம்! தீவாரை ஆபத்திலிருந்து விடுவித்த மகோபகாரியை இப்படி அவமானகரமாக நடத்தலாமா? சாமியாரே? மனமிரங்கி மன்னியுங்கள்'' என்று கூவினார்கள். "இப்படி நீங்கள் செய்வது அக்கிரமம்; இது நன்றாக இருக்கவில்லை'' என்று வேறு சிலர் சினந்துரைத்தார்கள். தேவதத்தனோ, தலைவனுக்குக் கீழ்ப்படியவேண்டிய கடமையை நன்றாக அறிந்தவனானபடியாலும், தான் சொன்ன பேச்சுக் கேட்காமல் பாம்பை எதிர்க்கச் சென்றது தன்மேல் பிசகென்று உணர்ந்தபடியாலும், மடாதிபதி சந்நிதானத்தில் முழந்தாட்படியிட்டு "நான் செய்தது பெரும் பிழைதான்; சொன்னபேச்சுக் கேட்காத நான் திருக்கூட்டத்தில் இருக்க அருகனல்ல'' என்று வணக்கமாகச் சொல்லிவிட்டுத் தன் தவக்கோலத்திற்குரிய ஆடைகளையும் கௌரவசின்னங்களையும் களைந்து மடாதிபதியின் முன்னர் வைத்துவிட்டு வெளிக்கிளம்பிப்போகப் புறப்பட்டான்.

வில்லனீவ் மடாதிபதி தேவதத்தனிடத்தில் விசுவாசக்குறியின்றி நடந்துகொண்டது உண்மையாக அவனிடத்து மனஸ்தாபம்கொண்டு செய்தகாரியமல்ல; தேவதத்தன்தான் செய்த வீரப்பிரதாபச் செய்கையால் மமதைகொண்டு நடக்கிறானா, அல்லது ராக்ஷத ஸர்ப்பத்திலும் கொடிதான அகந்தையை அடக்கும் வல்லமையுள்ளவனா என்று சோதிப்பதற்காகமாத்திரந்தான். தேவதத்தன் வணக்கமுள்ள சற்குணசீலனென்று தான் எண்ணியதற்கு இவ்வாறு தக்க ருஜுக்கிடைத்ததினால் ஆநந்தங்கொண்டு, தேவதத்தனைத் தொடர்ந்துசென்று அவனுக்குத்தக்க உபசாரணைகள் செய்து அழைத்துவந்து தனக்குப்பின் மடாதிபதியாக வரும்படியான இளவரிசைப்பட்டத்திற்கு நியமித்து அவனை அன்பாக நடத்திவந்தார்.

தேவதத்தனும் வில்லனீவ் மடாதிபதியிடத்தில் நன்றியறிதலோடு நடந்து தலைவருக்கு மிக்க உதவிபுரியும் பக்கத்துணைவனாக அமர்ந்திருந்தான். வில்லனீவ் மடாதிபதியார் காலஞ்சென்றபிறகு கிரமப்பிரகாரம் தியூதோன் டி கோஸான் என்னும் தேவதத்தன் மடாலயத்திற்குத் தலைவனாகி, அந்தத் தவப்பள்ளிக்கும் ரோட்ஸ் தீவாருக்கும் மிக்க நன்மை செய்தான்.

உடையார்கோவில், அப்பாசாமி ஐயர்.

# தமிழ் நூல்களும் நூலாசிரியர்களும்.

## 7. மாணிக்கவாசகர் காலம். *

மாணிக்கவாசகர் காலத்தை வரையறுத்தற்கு நமக்கு உதவியாகும் நூல்கள் சிலவுள. அவைகளில் அவர் சரித்திரத்தையே கூறும் வாதவூரர் புராணமும் திருவிளையாடற்புராணமும் அவரால் இயற்றப்பட்ட திருவாசகமும் திருச்சிற்றம்பலக் கோவையாரும், இன்றியமையாதன. மேலும் மூவர் தேவாரத்தையும் நாலாயிரப் பிரபந்தத்தையும் ஆங்காங்கு காட்டுதல் அவசியமாகும். இந்நூல்கள் நிற்க, மற்றோர் ஆதாரம் இல்லாதமையாது. அது பழையகாலத்துச் சிலா சாஸனங்களும், தாம்பிரமுதலான ஏட்டு .. ஸாஸனங்களுமே. பின்னர்க்கூறிய இவ்வாதார மொன்றே தற்காலத்தில் நம்புதற்குளதாகும். ஆயினும் மாணிக்கவாசகர் காலத்தை நிர்ணயிப்பதில் இச்சிலாஸாஸனம் முதலான ஆதாரங்கள் அதிகப் பயன்படுவனல்ல. கிடைக்கின்ற ஆதாரங்களைக்கொண்டு இப்பெரியவர் காலத்தை ஒருவாறு வரையறுப்பாம்.

1. தேவாரம் பாடிய மூவருள் ஒருவராய சுந்திரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத்தொகை என்றோர் அரியநூல் இயற்றினர். அத் திருத்தொண்டத்தொகையில் மாணிக்கவாசகர் பெயர் இல்லாத காரணம் யாதோ? மாணிக்கவாசகர் தொண்டர் அல்லரென்றும் ஈஸ்வராம்சமென்றும் ஆதலால் திருத்தொண்டத் தொகையில் அவர் பெயர் கூறப்பெற்றிலது என்றும் சிலர் கூறுவர். இக்கூற்று ஒருவருக்கும் சமாதானந்தருவதில்லை. மேலும் வரையறை யில்லாமையால் நமக்குத் தோற்றிய வண்ணம் ஒரு சமயம் பெருக்கியும் ஒரு சமயம் சுருக்கியும் வைத்துக்கொள்ளக்கூடியதான "பொய்யடிமை யில்லாத புலவர்" குழாத்துள் ஒருவராய் மாணிக்கவாசகரை வைத்தெண்ணுவர் சிலர். அவர் கொள்கையும் எமக்குச் சம்மதமன்று. யுக்தியநுபவங்களுக்கிணைய யாவரும் ஒப்புக்கொள்

* இதனை ஆங்கிலத்தில் எழுதிய மகா-ள-ள-ஸ்ரீ து. அ. கோபிநாதராவ் அவர்கள் அனுமதி பெற்றுத் தமிழகத்திற்குப் பயன்படுமென்று இது—மொழி பெயர்க்கப்பட்டது.

ளக்கூடிய முடிவுரை யாதெனில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத்தொகை எழுதிய காலத்து மாணிக்கவாசகர் அவர் பெயராலேனும் அவர் நூலாலேனும் அறியப்பட்டிலர் என்பதும் அனேகமாய்ச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்துக்கு முந்திய காலத்தவர் அல்லரேன்பதுமே.

2. ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரமூர்த்திகள், ஆகிய பெரிய சைவாசாரியர் மூவருக்கும் முந்திய காலத்தவர் மாணிக்கவாசகர் என்றால், மூவர் தேவாரத்துள் மாணிக்கவாசகர் பிரஸ்தாபம் வரவேண்டும். நரிபரியாக்கிய லீலையை அப்பர் கூறியுள்ளாரென்றும், அவ்வாறு அப்பர் கூறிய நரிபரியாக்கிய லீலை மாணிக்கவாசகர் பொருட்டே சிவபிரான் ஆடிய லீலையென்றும், காரண காரியத் தொடர்பு காட்டாது, "தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால்" என்று பிடிவாதமாய்ச் சாதிப்பர் சிலர். அவ்வாறே வாதவூரர் புராணமும் பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற்புராணமும் நரிபரியாக்கிய லீலை மாணிக்கவாசகர் பொருட்டே சிவனிழைத்த லீலை என்று கூறிவிட்டன. நன்று! இந்த நரிபரியாக்கிய லீலையைப்பற்றி மாணிக்கவாசகரே தமது திருவாசகத்தில்[1] எவ்விதம் விதந்து கூறுகின்றார் என்று கவனிப்போம். அந் நரிபரியாக்கிய லீலை தனக்காகச் சிவபிரான் இழைத்த லீலையென்று அவர் விவக்ரிக்கக் காணோம். அப்பர் செய்யுளில்[2] கூறிய நரியைக் குதிரைசெய்யும் லீலை சிவபிரான் மாணிக்கவாசகருக்காகச் செய்த லீலையாயின், அச்செய்யுளிலே விதந்து கூறிய மற்றைய லீலைகளெல்லாம் எவ்வெவ்வடியார்களை உத்தேசித்துச் சிவபிரான் அருளிச்செய்தன. நரகரைத் தேவுசெய்த லீலையும், விச்சின்றி நாறுசெய்த லீலையும் யாரை உத்தேசித்து? மாணிக்கவாசகரை உத்தேசித்தேயோ? இத்தன்மையான அற்ப வாதாரங்களைக் கொண்டு ஒரு கக்ஷி கட்டுதல் திருப்திகரமாக விருக்கவில்லை.

3. சிவபக்தரும் புலவருமான மாணிக்கவாசகர் தேவாரம் பாடிய மூவருக்கும் முந்தியவராயின், இவ்விராஜதானியில் பல

---

1. கீர்த்தித் திருவகவலினும், திருவார்த்தை 4, 5-வது செய்யுட்களினும் பார்க்க.

2. "நரியைக் குதிரை செய்வானு நரகரைத்தேவு செய்வானும், விரதங்கொண்டாட வல்லானும் விச்சின்றி நாறுசெய்வானும், முரசதிர்ந்தானை முன்னோட முன்பணிந்தன்பர்களேத்த, வர்வரைச் சாத்தி நின்றானு மாரூரமர்ந்த வம்மானே."

பல விடங்களிலும் பதிந்துகிடக்கும் பல சிலாஸாஸனங்களில் எதேனும்சிலவற்றிலேனும்இவர்பெயர்காணப்படவேடுமன்றோ? இவர் பெயர்குறித்த ஸாஸனம் ஒன்றேனும் காணக்கிடைக்க வில்லை. மேலும் 11-வது நூற்றாண்டிற்கு முந்தி இவர் உருவம் ஒரு கோவிலிலாகிலும் பிரதிஷ்டிக்கப்பட்டதென்று தெரிய வில்லை. எனக்குத் தோற்றியவரையில், இவ்வடியார் பெய ரைப் பொறித்த முதற் சிலாஸாஸனம் கும்பகோணத்திற் கடுத்த திருவலஞ்சுழி[3] யிலுள்ளது. மாணிக்கவாசகர் இதற் கு முந்திய காலத்தவராயின்,சிறுத்தொண்டரையும் சீராளதேவ[4] ரையும் மறவாத இராஜராஜசோழன் இவர் உருவத்தைப் பிர திஷ்டை செய்யாதும் விக்கிரக வாராதனைக்கு மானியங்கள் விடாதும் போவானேன்?

4. தேவாரம் பாடிய மூவருள் ஒருவரேனும் திருப்பெருந்து றையையாகிலும்,உத்தரகோசமங்கையையாகிலும் பாடியிருக்கக் கூடாதா? திருப்பெருந்துறை (ஆவிடையார்கோவில், தஞ்சா வூர் ஜில்லா) மாணிக்கவாசகர் போதமேவிய புண்ணிய பூமி யன்றோ? இராமநாதபுரத்திற்கு ஆறுமயில் தெற்கேயுள்ள உத்தரகோசமங்கை அவ்வடிகள் அடிக்கடி தங்கிய ஸ்தல மன்றோ? மாணிக்கவாசகர் மூவருக்கும் முந்தியவராயின், இவ் விரண்டு ஸ்தலங்களையும் அவர்கள் பாடாது விடுவரோ?

5. மாணிக்கவாசகரோ பாடல்பெற்ற ஸ்தலங்க[5] ளில் அனேக ஸ்தலங்களை வரிசைக் கிரமமாகப் பாடியிருக்கின்றார். மூவர் பாடிய ஸ்தலங்களில் பலவற்றைப் பாடி மேலும் நூதன மான வேறு சில ஸ்தலங்களையும் பாடியிருக்கின்றார். ஆயி னும், மாணிக்கவாசகர் பாடிய ஸ்தலமுறையை வைத்துக்

---

3. சிலாஸாஸன சர்ச்சாவிலாகா 1902-03—ம் வருஷத் தியவருஷாந்த ரிபோர்ட்டு, பக்கம் 17, நம்பர் 628.

4. தென்னிந்தியா ஸாஸனங்கள் 2-ம் சம்புடம், பக் 172 கம்.

5. சிவபுரம், தில்லை, திருப்பூவணம், வாதவூர், பாவநாசம், வெண்காடு, தேவூர், திருவாரூர், இடைமருதூர், திருவாஞ்சி யம், கடம்பூர், ஈங்கோய்மலை, துருத்தி, திருப்பனையூர், கழு மலம், புறம்பயம், குற்றாலம், பாலை (திருக்கழி), ஐயாறு, அண் ணாமலை, ஏகம்பம், பராய்த்துறை, பழனம், திருக்கழுகுன்றம், ஆனைக்கா முதலியன.

கொண்டு மூன்று நாயன்மார்களும் தங்களுக்குத் தோற்றிய சிலவற்றையே பாடிவிட்டனர் என்று சிலர் மறுப்பார். நன்கு! மூவரும் திருப்பெருந்துறை, வேலம்புத்தூர், சாந்தம்புத்தூர், உத்தரகோசமங்கை, பட்டமங்கை, மோரியூர், ஆகிய இப்பெரிய புண்ணிய ஸ்தலங்களையா மறக்கவேண்டும்? இவைகள் ஏற்கனவே மாணிக்கவாசகரால் பாடல் பெற்ற ஸ்தலங்களாயின், மற்றெவ்வூரை மறந்தாலும் திருப்பெருந் துறையையும், உத்திரகோச மங்கையையும் மறப்பாருண்டோ? உண்மையை யாராயுமிடத்து, மாணிக்கவாசகரே மூவர் பாடிய ஸ்தலங்களைப் பாடியபின்பு தன் காலத்தில் விசேஷமாய்க் கொண்டாடப் பெற்ற வேறு சில நவீனஸ்தலங்களையும் பாடினர் என்பதே உறுதியாகும். அவ்விதமே ஆழ்வாராதிகளின் திவ்யப்பிரபந்தங்களைப் படித்தால், முதல் ஆழ்வார்கள் பாடின ஸ்தலங்கள் சிலவென்றும் இடையே வந்த நம்மாழ்வார் பாடின பலவென்றும் கடையாழ்வாரான திருமங்கை மன்னன் பாடின பலபலவென்றும் தெள்ளிதினமையும். இதுவே ஒழுங்கு. முதற்காலத்தவர் சில ஸ்தலங்களையே காண்பர். காலஞ் செல்லச்செல்ல ஸ்தலங்கள் அதிகரிக்கும். பிந்திய காலத்தடிகளே பல ஸ்தலங்களைப்பாடும்படி நேரும். ஆதலின் இம்மூன்று பிரபல நாயன்மார்களுக்கும் பிந்தியே மாணிக்கவாசகர் அவதரித்தாரென்பது மலையிலக்காகின்றது.

6. யாம் கொண்ட கருத்திற் கிணங்கவே, மாணிக்கவாசகரும் ஆதிநாயன்மாருள் கண்ணப்பரையும், சண்டீஸ்வரரையும் பெயராற் கூறித் தேவாரம் பாடிய மூவரையும் குறிப்பாய்க் காட்டியிருக்கிறார். மாணிக்கவாசகர் திருவாசகம் முற்றிலும் தொண்டர்களையும் பழவடியார்களையும்[6] நினைந்து நினைந்து

---

6. (a) சிவமாநகர் குறுகப்போனாரடியார் யானும் பொய்யும் புறமே போந்தோம்.—திருச்சதகம், 85.

(b) போராவுலகம் புக்காரடியார் புறமே போந்தேன் யான்.—திருச்சதகம், 87.

(c) பழவடியார்க் குன்னணியார் பாதம் கொடுத்தி. திருச்சதகம், 89.

(d) பண்டைப்பரிசே பழவடியார்க்கீந்தருளும்.—திருவம்மானை, 9.

(e) நின்குரைகழல் காட்டிக் குறிக்கொள்கென்று நின்றொண்டரிற் கூட்டாய்.—செத்திலாப்பத்து, 8.

கசிந்துருகிப் பாடுகின்றார். அவைகளைப் படிக்குங்கால், அப்பரையும் சுந்தரரையும் சம்பந்தரையுமே நினைத்துமாணிக்கவாசகர் பாடினார் என்பது புலப்படும். பரமசிவும் தன் பக்தர்களிடத்தே அருள் சுரந்து செய்யும் லீலைகளை விரித்துக் கூறும் கீர்த்தித் திருவகவலில் மாணிக்கவாசகர் ஞானசம்பந்தருக்காகக் கழுமலத்தில் காட்சிதந்த [7] தையும், சுந்தரமூர்த்திக்காகத் திருவாரூரில் ஞானந்தந்த [8] தையும் எடுத்துக் கூறுகிறார் மேலும் அந்நூலில் மாணிக்கவாசகர் தேவாரவாக் [9] கென்றே சொல்லக்கூடிய வார்த்தைகளைப் பிரயோகஞ் செய்துகொண்டே போகிறார்.

7. மேலும், மாணிக்கவாசகருக்குச் சிவலீலைகளில் அனேகம் தெரிந்திருக்கின்றன. முந்தியவர்களாக யாம் கூறும் நாயன்மார்களுக்குத் தெரிந்த திருவிளையாடல்கள் சிலவே. நாயன்மார்கள் காலத்திலே தெரியாத திருவிளையாடல்கள் மாணிக்கவாசகர் காலத்திலே ஜனங்களுக்குத் தெரியவந்திருக்

---

(*f*) கழற்புணை கொண்டிழிகின்ற வன்பர்களேறினர் வான் யானிடர்க்கடல் வாய்ச்சுழி சென்று.—அடைக்கலப் பத்து, 4.

(*g*) உன் பழவடியார் கூட்டமடியேன் காணவாசைப் பட்டேன் கண்டாயம்மானே.—ஆசைப்பத்து, 9.

(*h*) அதிசயப்பத்து முழுமையும் "ஆண்டு அடியாரிற் கூட்டியவதிசயங் கண்டாமே," என்பது பல்லவி.

(*i*) இன்பவெள்ளத்துருக் கொண்டு தொண்டரையுள்ளங்கொண்டார்.—திருப்பாண்டிப்பதிகம், 3.

(*j*) தொண்டரெல்லாம் சேரும் வகையால்.—குலாப் பத்து, 5.

(*k*) கண்கணீர் மல்குந் தொண்டர்க்கு.—சென்னிப் பத்து, 8.

(*l*) பண்டைத்தொண்டர்.—யாத்திரைப்பத்து, 3.

7. கழுமலமதனிற் காட்சி கொடுத்தும்.

8. தேனமர் சோலைத் திருவாரூரின்
ஞானந்தன்னை நல்கிய நன்மையும்.

9. "யாவர்கோனென்னையும் வந்தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாதுமஞ்சோம்"

இது மாணிக்கவாசகர் கூற்று. மறுமாற்றத் திருத்தாண்டகத்தில் அப்பர் கூறுவது—"நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்",

கவேண்டும். பின்னரே திருவிளையாடற்புராணங்கள்[10] எழுதப்பட்டிருக்கவேண்டும். ஆதலால் மாணிக்கவாசகர் காலம் இத்திருவிளையாடற்புராணங்கள் எழுதப்பட்டதற்குச் சற்று முந்தியோ பிந்தியோ பொருந்தவேண்டும்.

8. சிற்றம்பலத்திற்குப் "பொன்னம்பலம்" என்ற பெயர் கி. பி. 904 ஞூத்தில் ஆண்ட சோழராஜன் முதலாவது பராந்தகன் அக்கோயிலைப் பொன்னாக்கிய பிறகே பொருந்திற்று. அப்பர் சுவாமிகள் சிற்றம்பலத்தைப் பொன்னம்பலமென்று இரண்டோரிடத்தில் கூறியுள்ளாரென்பது எமக்குத் தெரிந்தவிஷயமே. ஆயினும் அப்பர் கொடுத்த இப்பெயருக்குப் "பொன்னனைய வம்பலம்" என்று பொருள் படும் போற்றோற்றுகிறதேயன்றி, "பொன்னாலாய வம்பலம்" என்று பொருள் தோற்றுதல் இல்லை. இது அவ்வவ்விடத்தில் படிக்க விளங்கும். மாணிக்கவாசகரோ இதே பெயரைத் திருவாசகத்தில் ஒரு பதிகத்தில்[11] ஒவ்வொரு பாடலிலுந் தப்பாமல் வைத்துப் பாடினர். கீர்த்தித் திருவகவலில் "அம்பொற் றோலிதரு புலியூர்" என்றார். திருக்கோவையாரில் "செம்பொன் மாளிகைத் திருச்சிற்றம்பலத்து" (பாடல் 23) என்றும் கூறினர் இதனால், மாணிக்கவாசகர் காலத்தில் திருச்சிற்றம்பலம் பொன்வேயப்பட்டு நின்றதென்று விளங்குகின்றது. ஆதலால் மாணிக்கவாசகர் எவ்வாறு முதலாவது பராந்தகன் காலத்திற்கு முந்தினவர் ஆவர்?

9. பழைய கோவில்களின் மதில்களெல்லாம் நிறையக் கல்வெட்டெழுத்துக்கள் பொருந்திபிருப்பது வழக்கம். ஸாஸனங்கள் நிறைய வரையப்பெற்ற மதில்களையுடைய கோவில்கள் புராதனமானவை என்னலாம். ஏனெனில் பண்டைக்காலத்து

---

10. இப்பெயர் புனைந்த நூல்கள் இரண்டுள்ளன. ஒன்று வேப்பத்தூரர் இயற்றிய பழையநூல். இது இன்னமும் வெளிவரவில்லை. மற்றொன்று பரஞ்சோதி முனிவர் இயற்றியது.

11. கோயில்மூட்டத் திருப்பதிகம்.

(a) பொன்னம்பலக்கெதம்முடியா முதலே. (b) பொன்னம்பலக்கூத்து கந்தானே. (c) பொன்னம்பலத்தரசே. (d) பொன்னப்பலத் தெம்முழுமுதலே. (e) அரசே பொன்னம்பலத் தாடுமமுதே. (f) ஈசா பொன்னப்பலத் தாடுமமுதே. (g) பொன்னே பொன்னம்பலக் கூத்தா. (h) பொன்னம்பலத் தாடுந்தலைவா. (i) பொன்னம்பலம்.

அரசர்கள் கோவில்களுக்கு மானியம் விடுவது வழக்கம். அவர்கள் அக்கோவில்களைப் பாடல்பெற்ற ஸ்தலங்களென்றும் பாடல் பெருத்ஸ்தலங்களென்றும் கவனிக்கிறதில்லை. மத வித்தியாசங்களையும் பாராட்டுவதில்லை. சிலசமயம் பௌத்தர் கோவில்களுக்கும் அருகன் பள்ளிகளுக்கும் மானியம் விட்டனர். இத்துணை தயாள சிந்தையுள்ள அவ்வரசர்கள் அன்னிய மதஸ்தர்கள் கோயிலுக்கும் பணிவிடை செய்தபோது ஆவிடையார் கோயிலை மறந்தார்களென்பது மிகவும் அதிசயமாகும். பிற்காலத்து விஜயநகரத்தார் ஸாஸனங்களிற் சிலவும், பச்சையப்பன் தருமத்தைக் குறித்த ஒரு சிலையும், வணங்காமுடித் தொண்டைமானுர் பிறப்பித்த சில தாம்பிர ஸாஸனங்களும் நிற்க, இக்கோவில் சம்பந்தமான புராதன காலத்துச் சிலாஸாஸனங்களாவது தாம்பிர முதலிய எட்டுச்சாஸனங்களாவது அல்லது மத்தியகாலத்துச் சாஸனங்களாவது காணக்கிடைக்கவில்லை. அதனுலென்ன? கோவில் பழுதுபார்க்கப்பட்டிருக்கலாம் என்று ஒருவர் கூறலாம். மெய்யே! ஆனுல் முன்காலத்தில் கோவில்களைப் பழுது பார்த்த அடியார்கள் மதில்களிற் பொறித்த ஸாஸனங்களையும் எழுத்துக்களையும் தாங்கள் பழுதுபார்க்கும் சமயத்தில் புதிதாக மதில்களில் அமைத்த சிலைகளில் மாறுபாடில்லாமல் வெட்டி விடுவது வழக்கம். அவ்வாறு பழைய ஸாஸனங்களைத் தாமும் வெட்டிவைக்கும்போது கோவில் புதுப்பிக்கப்பட்டதென்றும், பழைய ஸாஸனங்களை மாறுபாடில்லாமல் எவ்வாறிருந்ததோ அவ்வாறே வெட்டி வைத்திருப்பதாகவும் கீழே வரைந்து வைப்பார்கள்.[12] விஜயநகரத்தரசர்களும் அவ்விதியை அநுஷ்டித்தவர்களே. ஆனுல் ஆவிடையார் கோவிலிலோ அத்தன்மையான ஸாஸனங்களின் பிரதிகளொன்றுமில்லை. கோவில் புதுப்பிக்கப்பட்டதாகவும் தெரியவில்லை. இதை உத்தேசிக்கும் அளவில் இக்கோவில் புரா

---

12. திருவல்லம், திருப்பதி, திருமழப்பாடி, திண்டிவனம் முதலிய இடங்களில் இவ்விதமே பழைய ஸாஸனங்களின் பிரதிகள் வரையப்பட்டிருக்கின்றன.

தன மல்லவென்று தோற்றுகிறது. உத்தரகோச மங்கையிலோ அனேக ஸாஸனங்களுள்ளன. அவையெல்லாம் பிற்காலத்துப் பாண்டியர்கள் பிறப்பித்த ஸாஸனங்களாகின்றன. ஆதலால் அக்கோவில் புராதனமே யல்ல. ஆகவே மாணிக்கவாசகருடன் மிகவும் சம்பந்தமுள்ள இரண்டு கோவில்களும் புராதன காலத்தன வல்லவென்று ஏற்பட்டது.

10. ஆவிடையார் கோவில் கட்டிடத்தின் அமைப்பும் அதிற்பொருந்திய சிற்பவேலைகளும் விஜயநகரத்தார் அல்லது நாயக்கராஜர்காலத்து சிற்பவேலைக ளாகின்றன. கோவிலின் பெரும்பாகம்பிற்காலத்ததென்று ம்சர்ப்ப ச்கிரசபோன்றுமே சற்று முந்தியகாலத்ததென்றும் விளங்குகின்றது. பிற்காலத்தரசர்கள் கோவிலை விஸ்தரித்தார்களென்பதே கோவில் புராதனமில்லை யென்ற சங்கையைத்தருகின்றது.

11. கூடியவரையில் பழைமையான சிவாலயங்களில் தெற்குப் பிராஹாரத்தில் ஓர் மாடத்தில் தெக்ஷிணாமூர்த்தி ஸ்ரூபியாகியசிவபிரான் உருவத்தையமைத்துமேலேமண்டபமும்முன்னிலையில் முகப்பும் கட்டிச் சிறப்பித்தல் வழக்காயிற்று என்பது நமக்குத் தோற்றும். பிற்காலங்களில் உண்டாகிய இந்தத் தெக்ஷிணாமூர்த்தி மண்டபம் ஏற்கனவே ஏற்பட்ட சிவாலயத்தின் அழகைக் கெடுக்கிறது. மேலும் மதில்களில் ஏற்கனவே வரையப்பட்டிருந்த சிலாஸாஸனங்களையும் மறைத்துவிடுகிறது. ஒருசமயம் ஸாஸனங்களின் முக்கியபாகங்களை மூடிவிடுகிறது. இப்படி முதன்முதல் ஏற்படாது இடையே ஏற்பட்ட தெக்ஷிணாமூர்த்தி மண்டபத்திற்குக் காரணம் விசாரிக்குமளவில், ஜனங்கள் தெக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபத்தில் சிவபிரானைத் தொழுவாரம்பித்தகாலம் பிற்பட்டகாலமாயிருக்கவேண்டுமென்றும், தெக்ஷிணாமூர்த்திரூபத்தொழுதல் ஏற்பட்ட பிறகே இவ்விதமான மண்டபங்கள் கட்டப்பட்டனவென்றும் வியக்தமாகின்றது. இப்படித் தெக்ஷிணாமூர்த்தியை ஜனங்கள் தொழுவாரம்பித்தகாலம் எதுவாகும் என்று ஆராய்ந்தால், தனது சீடரான மாணிக்கவாசகர் மூலமாய் உலகத்திற்குத் திருவாசகத்தைத் தந்தருளி அடியார்களை உஜ்ஜீவிக்கச் செய்ததின்

நிமித்தமே அன்றுமுதல் ஜனங்கள் தெக்ஷிணாமூர்த்தியைத் தொழுதனர் என்று தோற்றுகிறது. முதலாவது குலோத்துங்கச்சோழதேவன் காலத்திற்பிறந்த திருக்கண்டேசுரம் கோவில் ஸாஸனம் ஒன்று தெக்ஷிணாமூர்த்திக்கு விட்ட மானியத்தைப் பற்றி விவகரிக்கின்றது. ஆகவே, இவ்வரசன் அரசாட்சிகாலத்துக்குச் சில தலைமுறை முந்தியேதான் திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகர் வீற்றிருந்து சிவஞானபோத மேவினர் என்பது விளங்குகின்றது.

12. பண்டியன் அரிமர்த்தனன் காலத்து மாணிக்கவாசகர் இருந்தாரென்று கூறி தேசசரித்திரவாராய்ச்சிகளுக்கும் சிலா ஸாஸன லிகிதங்களுக்கும் புலப்படாத ஒரு எல்லையைக் காட்டுதல் பயன்படாது. அரிமர்த்தனன் என்ற பெயர்கொண்ட ஒரு பாண்டியன் இருந்தானோ இல்லையோ அதுவே தெரியவில்லை. இந்தக் கட்டுக்கதையரசனை ஆதாரமாகக்கொண்டு வாதம் பேசுதல் வீண்காலச்செலவே. மேலும், இவ்வடியார் சரித்திரத்தையே விதந்து கூறவேண்டும் என்று எழுதப்பட்ட வாதவூரர் புராணம்[13] பாண்டியன் பெயர் ஒன்றையும் கூறாது கௌரவமாய் மௌனம் சாதிக்கின்றது. ஆயினும் அப்பாண்டியன் சோழனுக்குக் கப்பங்கட்டும் ஓர் சிற்றரசன் என்பது புலப்படும்படி சில விஷயங்கள் கூறுகின்றது. எவ்வாறெனில், மாணிக்கவாசகருக்கும் புத்தர்களுக்கும் நிகழ்ந்த வாதத்தை நோக்குவான் வேண்டிச் சிற்றம்பலத்திற்கு வந்த பாண்டியனும் ஈழத்திறைவனும் அவ்விடத்தே கூடாரமடித்துத் தங்கிய சோழனைக் கண்டுகொள்ளக் காணிக்கை கொண்டுவந்தனர் என்று அந்நூல் கூறுகின்றது. ஆதலின், இவ்வாறு சோழனைக் காணப் பாண்டியனும் ஈழத்திறைவனும் வந்தனரென்பதற்குப்

---

13. தென்னிந்தியாவில் மகம்மதியர் படையெடுத்து வந்த பிறகுதான் இந்நூல் செய்யப்பட்டிருக்கவேண்டும். ஏனெனில் அரசன் தனது மந்திரியைத் "தொப்பி" "குப்பாயம்" முதலானவைகளால் அலங்கரித்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. "தொப்பி" என்பது "தோபி" என்ற பாரஸீக வார்த்தையின் சிதைவு.

பொருள் வேறென்ன கொள்ளலாம்? பாண்டியனும் ஈழத்திறைவனும் சோழனுக்குக் கீழ்ப்பட்ட மன்னர்களென்பதே தகுதியாகும். இவ்வாறு பாண்டியர்கள் சோழர்களின் கீழ் அடிமைப்பட்டகாலம் 10-ம் நூற்றாண்டின் ஆரம்பமுதல் 13-ம் நூற்றாண்டின் இறுதிவரையிலுள்ள இடைப்பட்டகாலம் என்பதும், பின் கூறிய நூற்றாண்டிற்குப் பிறகேதான் பாண்டியர்கள் தலையெடுத்தனரென்பதும் சரித்திரங்களால் விளங்குகின்றன. ஆதலால் மாணிக்கவாசகருக்கும் புத்தர்களுக்கும் விவாதம் நடந்தகாலம் சோழர்களின் கிழ் பாண்டியர்கள் அடங்கி இருந்தகாலமென்றே கொள்ளுதல் தகுதியாகும்.

13. மாணிக்கவாசகர் தன்னூலான திருக்கோவையாரில் வரகுணன்[14] என்ற ஓர் பாண்டியனை இரண்டுமுறை கூறுகின்றார். போற்றித்திருவகவலிலும்[15] இப்பாண்டியனைக் குறிப்பாய்க் காட்டினார். கங்க மன்னனை இரண்டாவதுபிருதிவிபதி என்பான் பிறப்பித்த உதயேந்திரம் ஸாஸனத்தினால் அவன் பாட்டனை முதலாவது பிருதிவிபதி வேம்பல்குழியில் ஓர் சண்டையிட்டுப் பாண்டியன் வரகுணனோடு ஸ்ரீபுரம்பியத்தில் போரிட்டு மாண்டான் என்பது தெரிகின்றது. முதலாவது பிருதிவிபதியின் காலம் கி. பி. 9-ஆவது நூற்றாண்டின் முற்பகுதியாகும். சேஷகிரி சாஸ்திரியார் அவர்கள் தமது தமிழ்க் கவி சரிதத்தின் அநுபந்தத்தில் காட்டிய பாண்டிய ராசவமிசாவளிகளில் வரகுணபாண்டியன் ஒருவனே காட்டப்பட்டிருக்கிறது. இரண்டாவது வரகுணபாண்டியன் இல்லை. ஆதலால் இவ்வரசனைப் பாடிய மாணிக்கவாசகர் கி. பி. 9-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகேதான் அவதரித்திருக்கவேண்டும்.

14. மகா-ள-ள-ஸ்ரீ **S. A.** திருமலைக் கொழுந்து பிள்ளை அவர்கள் பிழையான ஆதாரமொன்றின்மேல் தமது வியாசத்தைக்

---

14. வினைமுற்றி யிரங்கல் என்னும் துறையில், "இருங்களி யானை வரகுணன் வெற்பு" என்றார். மருவுதலுரைத்தல் என்னும் துறையில் "வரகுணனுந் தென்னவனேத்துஞ் சிற்றம்பலம்" என்று சிற்றம்பலத்தை வர்ணித்தார்.

15. நரகொடு சுவர்க்க நானிலம் புகாமற் பரகதி பாண்டியற் கருளினை போற்றி.

கட்டினர். பௌத்தமதம் ஜைனமதத்திற்கு முந்தியதென்றும் ஜைனமதம் பௌத்தமதத்தின் கிளையென்றும், தேவாரம்பாடிய மூவரும் ஜைனருடன் வாதம்புரிந்ததால் பிந்தியவர்களென்றும், புத்தருடன் வாதம் புரிந்த மாணிக்கவாசகர் முந்திய காலத்தவரென்றும் விந்தையுரை கூறினர்! பௌத்தம் முந்திய மதமென்றும் ஜைனம் பிந்தியமதம் என்றும் கூறுதல் அசம்பாவிதமாகும். ஒரு சமயம் ஜைனமதமே பௌத்தமதத்திற்கு முந்தியதாகலாமென்பதும், எப்படித் தர்க்கித்தாலும் ஜைனம் பௌத்தத்திற்கு ஒருநாளும் பிந்தியதாகாதென்பதும் யாவருக்கும் நன்றாய்த்தெரிந்த விஷயம். ஆதலின் புத்தர்களைத்தொலைத்த மாணிக்கவாசகர் முந்தியவர் என்பதும் ஜைனர்களுக்கிடர் விளைத்த மூவரும் பின்வந்தவர்களென்பதும் பொருந்தாவுரைகளாகும். 9-ஆம் நூற்றாண்டிற்குப்பிறகு புத்தர்களில்லையென்று கொள்வதும் சம்மதப்படாதவார்த்தையாகும். ஏனெனில், கி. பி. 984 முதல் 1012 வரையில் அரசாண்ட முதலாவது இராஜராஜன் காலத்தில் நாகபட்டினத்தில் ஓர் முக்கிய பௌத்தப் பள்ளி இருந்ததாகப் பெரியலேயிடண் ஸாஸனம் கூறுகின்றது. நாகபட்டினம் வெகுகாலங்களாகப் புத்தர்கள் குடியேறிய பட்டினங்களில் ஒன்று. ஒருசமயம் மாணிக்கவாசகரும் இந்நகரத்துப் புத்தர்களோடேயே வாதம்புரிந்திருந்தாலும் இருக்கலாம்.

15. மாணிக்கவாசகருடன் சம்பந்தம் பெற்ற திருப்பெருந்துறை மலையாளக்கரையிலுள்ள திருப்பூனித் துறை என்பர் சிலர். அதுவுமாகாது. மாணிக்கவாசகரே தான் ஞானம்பெற்றஸ்தலம் பாண்டிநாட்டிலுள்ள[16] திருப்பெருந்துறை என்று கூறியிருக்கின்றார். அதற்கிணங்கத் திருப்பெருந்துறையாகும்

16. திருப்பெருந் துறையைப்பற்றிப் பிரஸ்தாபஞ்செய்யும்போதெல்லாம் மாணிக்கவாசகர் "தென்" என்றும், "தென்னன்" என்றும் அடைமொழி கொடுத்துக் கூறுகின்றார்.—"தென்னன் பெருந்துறை, தென்பெருந்துறை, தென்னபெருந்துறையான், தென்பெருந்துறையாய், தென்பாலைத் திருப்பெருந்துறை யுறையுஞ் சிவபெருமான், தென்பெருந்துறை நாயகன், தென்பெருந்துறைச் சேவகன், தென்னன் பெருந்துறையாளி, திருத்தென் பெருந்துறையான்," முதலியன.

இவ்வாவிடையார் கோவில் மிகவும் கியாதிபெற்றதாகவும் சிவனடியார்கள் கூடுமிடமாகவும் மாணிக்கவாசகருக்குத் திருவிழாக்கொண்டாடும் புண்ணிய பூமியாகவும் இருக்கின்றது. மேலும் சிலா ஸாஸன சர்ச்சாவிலாகா உத்தியோகஸ்தர் 1903-ஆம் ஆண்டில் திருப்பூனித்துறையைப்போய்ப்பார்த்தனர். அங்கே ஒரு கோடைரவியின் வட்டெழுத்துச் சாஸனம் ஒன்றொழிய ஒருஸாஸனமுமில்லை. ஆதலின் அதனைப் புராதன நகரமென்பதற்கில்லை. வேறு சிலர் கொங்குநாட்டிலுள்ள பெருந்துறையிலல்லவோ மாணிக்கவாசகர் ஞானம் பெற்றனர் என்பர். அதுவும் பொருந்தாவுரையே. பாண்டியன் பிழைசெய்த தனதமாத்தியனைத் திருப்பிக்கொண்டான் என்பது உண்மையாயின், சௌஜன்னியமும் சௌகரியமுமேற்படாத வந்நாட்டுகளிலே பாண்டியன் தன்னாடு விட்டுக் கொங்கு நாட்டிற்கும் கேரள நாட்டிற்கும் போவதெப்படி?

இதுகாறும் கூறியவுரைகளாற் போந்தமுடிவுரையாதெனின், முதலாவது பராந்தகனுக்கும் வரகுணனுக்கும் முதலாவது பிருதிவிபதிக்கும் வெகுகாலம் பிந்தியும், முதலாவது குலோத்துங்கச்சோழன் காலத்துக்கு முந்தியும், அனேகமாய் முதலாவது இராஜராஜன் காலத்தில் மாணிக்கவாசகர் அவதரித்து ஞானம் பெற்றுச் சிவனடியை யடைந்தாரென்பதே. ஆதலால் மாணிக்கவாசகர் காலம் கி. பி. பத்தாம் நூற்றூண்டின் இறுதியிலாகிலும் பதினோராவது நூற்றூண்டின் துவக்கத்திலாகிலும் அமையவேண்டுமென்பது எம்முடைய கருத்து.

பத்திராசிரியன்.

---

# அச்சுதராயாப்பியுதயம்.

(258-ம் பக்கத்தொடர்ச்சி.)

அரசர் அன்றையதினம் மாலைப்பொழுதில் ஸ்ரீ ரங்கநாதரைத் தரிசித்துமெய்ம்மறந்து துதித்துத் தியானித்து மனம் பூரித்தனர். பிற்றை நாட்காலையில் துயிலொழிந்து காலைக் கடன்களைமுடித்துக் கருடனைக்கண்டு பயணமாகி குதிரையின்

மேலேறிப் புறப்பட்டனர். அவ்வளவுக்குள்ளாக நண்பர்களான சிற்றரசர்கள் அச்சமயத்திற்கேற்ற ஆடைகளையும் உடைகளையும் பூண்டு, ஆயுததாரிகளாய் வெளிக்கட்டுகளில் தயாராக விருந்து, அரசர் புறப்படவே குதிரைகளிலேறித் தாமுங் கூடச் சென்றனர். சகலவிதமான சைனியங்களும் அரசருக்கு முன்னும் பின்னுமாகக் கூடச்சென்றன. வழிகளிலாங்காங்கு இறங்கப்போகு மிடங்களில் எவ்வகைப்பட்ட சாமான்களும் வேண்டுவதற் கதிகமாக ஆயத்தப்படுத்தப்பட்டிருந்தன. ஸ்ரீரங்கத்தில் எஞ்சிய எவ்வகைப்பட்ட சாமான்களையும் அங்கேயே பிறர்க்குதவி விட்டனர். சவாரி காவேரியாற்றோரத்தை ஒட்டி மேற்றிசையாகச்சென்றுகொண்டிருந்தது. சிலநாட் பயணஞ்சென்று கோங்குநாட்டை யடைந்து அங்கிருந்து ஸ்ரீரங்க பட்டணம் போய்ச் சேர்ந்தனர். அப்பிராந்தியங்களிலுள்ள துளுவ அரசர்கள் தம் இறைகளை வேண்டி விரும்பிச் செலுத்தினர். அவைகளைப் பெற்றுக்கொண்டு, வடதிசையாகச் சென்று தம் நாட்டெல்லைக்குட் பிரவேசித்து, உள்நாட்டு வழியாகவே அச்வபதி நாட்டை ஆள்வோனாகிய பகைவனான துலுக்க அரசன்மீது படையெடுத்துப் போயினர்.

அரசருடைய சைனியங்கள், கைவிட்டுப் போய்க் கண்ணுக்குப் புலப்படாதிருந்து பிறகு சிறிது நாட்சென்று காலவசத்தால் புலப்பட்ட தம் பொருளைக் கைப்பற்ற முயன்று அதைக் கைவிடாது இழுத்துப் பறித்துக் கூத்தாடுபவர் போல, அந்நியன் கையிலகப்பட்டுக் கொஞ்சகாலமாகக் கண்ணாற் காணவுங் கிட்டாதிருந்த அச்வபதி ராஜ்ஜியங் கட்புலனாகவே அதைக் கைவிடாது போர்க் கூத்தாடினர். வெயிலானது மலையிடுக்குகளில் குடியாயிருக்கும் இருள்களைக் கவிந்துகொள்வதற்கொப்ப, கோட்டைக்குள் குடியாயிருந்த பகைவர்களான மேனாட்டாரைக் கவிந்துகொண்டனர். பாரஸீகர்கள், எப்பக்கத்திலும் பிரளயகாலத்துக் கடல் வெள்ளத்தாற் சூழப்பட்டனர் போலும், எப்புறத்திலும் பெரு நெருப்பினால் வளையப்பட்டனர் போலும், ஓடிப் பிழைக்கத் திக்கற்றுக் காலபாசத்திலகப்பட்டனர் போலும், கோட்டைக்குள்ளிருந்து ததும்பித் தத்தளித்தனர். முதலில் திசை தெரியாமல் மேன்மேல் உக்கிரமாக வந்து தாக்கும் கவண்டிக் கற்களாலும், பிறகு இடைவிடாமல் சாத்தப்படும் தடியடிகளாலும், அதன் பிறகு கோடரி குந்தாலி முதலிய ஆயுதங்களாலும், இருக்க இருக்க இருதிறத்தாருக்கும் சண்டை முற்றிக்கொண்டது. சத்துருக்களுடைய கோட்டையில் பீரங்கி வாய்களினின்று

வெகுவேகமாக வந்து மோதுங் கற்களாலும் இடிபர்றைகளாலும் நெருப்புப்பொறிகள் பறக்கத் தலைப்பட்டன. மண்ணுங் கல்லுஞ் சேர்த்துக் கட்டப்பட்டிருந்த மலைக்கோட்டையின் மதில்களின் சிகரங்கள் சிறிது நேரத்திற்குள் பீரங்கிப் பிரயோகத்தால் ஆங்காங்கிடிபட்டு இராவணன் தலைகள் போலத் தரையில் வீழ்ந்துகுவிந்தன. விஜயநகரத்துச் சேனைகளிற், சிலர் எதிரிகளோடு சண்டையிட்டு முண்டிநின்றனர்; சிலர் கோட்டை மதில்களின் வெளிப்பக்கங்களில் மண்வெட்டி கடப்பாரை முதலியவைகளால் கீழ பறிந்தனர்; வேறு சிலர் கோட்டைமதில்களிலேறி உள்ளே குதித்தனர்; பின்னுஞ் சிலர் பீரங்கிப் பிரயோகங்களாலும்யானைகளாலும் கோட்டை மதில்களை இடித்துத் தள்ளினர். இவ்வாறு உள்ளே புகுந்து பகைவர்களைக் கண்டதுண்டமாக்கிக் கொன்று தீர்த்தனர். நாமுஞ் சிலர் சண்டையில் மாண்டனர். சண்டையில் உயிர் துறந்தவர் நீங்கலாகப் பாக்கியாயிருந்த இராணுவ வீரர்கள் களிப்புற்றுச் சேனாதிபதியின் பக்கத்தில் வந்து கூடிக்கொண்டனர். மேற்றிசையில் மலுகானை கொலைக்கக்கருதிச் சேனாபதி வெளிப்புறப்படவே, வடதிசையில் சிவபிரானுடைய நட்பு வலிமை பெற்றோனாகிய குபேரனும் நடுக்கமுற்றானெனில், மற்றோர்கள் உயிர்மேல் ஆசையொழிந்தனரென்று உலாவவும் வேண்டுமா? அவரது சேனைகள் துலுக்கர்கள் வாசமாயிருந்த பகைவரது பட்டணங்களை நெருப்புவைத்துக் கொளுத்தின. தீத்தொழில்களுக்குக் குறைவிடமாயிருந்த அத்துலுக்கர்கள் வாசமாயிருந்த வரையில் அவர்களிடத்துக் குடியாயிருந்த பெரும்பாவங்கள், அவர்கள் உயிர் துறக்கவே, அவர்களுடன் புகைரூபமாய் வெளிக்கிளம்பின. இம்மட்டா! ஐயோ பாவம்! அவரது படையாளர்கள், பகைவர்களுடைய பட்டணங்களில் புகுந்து, சண்டையில் வெட்டித்தள்ளின துலுக்கர்களின் தலைகளை அவரது பெண்பாலாரிடத்து அநுதாபப்படுபவர் போல் அவர்களுக்குக் காட்டினர்.

(இன்னும வரும்)

**T. S. குப்புஸ்வாமி சாஸ்திரிகள்.**

சலா. (சிரித்து)

சபாஷ்! நாதனே! தந்தன னுடையும்;

தரித்துக் கொள்கநீ! சலாபத் கானென;—

[நூர்ஜஹான் சலாபத்கானுடைகளைக் கொண்டுவந்துதர]

விசுவ. சிரித்து நூர்ஜஹான் சிருடை தந்தனள்!

வாங்கினன். உடுத்துரு மாறுவன். நூர்ஜஹான்!

பாங்கிக் கென்னுடை பண்ணுக!

(நூர்ஜஹான் காஞ்சனைக்கு விசுவநாதன் வேடம்பூட்ட, விசுவநாதன் சலாபத்கானுடைகளைப்பூண)

தோழனே!

கூத்தெலாங் கண்டு கொண்டனை புன்னகை!

காத்திருப் பவர்கள் காவலைக் கடந்து

போவதற் கான புகலுரை யுளதேல்,

ஈவதுன் கடனும். எனக்கது பயிற்றுவாய்.

[காஞ்சனையும் விசுவநாதனும் முறையே விசுவநாதன் சலாபத்கான்போல் வேடம்பூண்டு ஜீவராயுடனிற்ப]

சலா. என்னைப் போலுரு வெடுத்த தன்மையால்,

அன்னதற் கிங்கித மறிதல் வேண்டும்.

உருவினு மொத்தாய்; புரவியும் பெற்றாய்;

இருளினு மறியா ரென்னினும், வாயிற்

காப்பவர் இங்கிதங் கழறுவ ராதலின்

ஏய்ப்ப தியலாது! எதிர்மொழி கூறிச்

செல்லுதல் சிரமம். செப்புவன் கோடி!—

சொல்லுவர் வீரர்கள் தொழுதுனை நின்று,

"குதாபஜுஸ் குதாநஹி

முகம்மதுபஜுஸ் பீர்நஹி"

என்றே, அறிவுடை யேந்தலே! அதற்கு

"மக்காப்ஜுஸ் மர்வாநஹி

பாஹேர் ஜாநே ராஹா சோடியே"

என்றுரை தருக!—எயிற் புறவாயில்

நின்றவ னியானென நினைந்தென் மொழிக்கு

நேருரை வழங்குக, நிறுத்த முறையே;—

"குதாபஜாஸ் குதாநஹி
முகம்மது பஜாஸ் பீர்நஹி"

விசுவ. கேசவன் பஜாஸ் ஈசன் நஹி
தேசிகன் பஜாஸ் தேசிகன் நஹி—

சலா. (புன்னகை செய்து)
இடக்கிது விடுதி யிஞ்சியின் காவலைக்
கடக்க லாவதோர் கட்டுரை கழறுதி!

விசுவ. "மக்காபஜாஸ் மாவாநஹி
பாஹோர் ஜானே ராஹா சோடியே"

சலா. அச்சா!

விசுவ. தோழ! அடுத்தது வைகறை;
இச்சா ரெழுந்தியா மேகச் செய்க!

(சலாபத்கான் வெளியேசெல்ல)

அரசன் புதல்வி யாதலிற் கொய்யுளைக்
குரகத மூருதல் கூடு மெனினும்,
ஆணுரு வமைந்தனை! அன்னதற் கேற்பக்
காணுமா றெவருங் காப்பதுன் கடனே!

(சலாபத்கான் உள்ளே வந்து)

சலா. நாதனே! குதிரைகள் நயந்து நின்றன!
போதுக நண்பொடும் பொலங்கொடி யோடும்!

காஞ்ச. செம்மலு நீயுஞ் செய்தன மறவேம்!
அம்ம! எங்க ளணிநகர்க் கேகுதும்!
விடையுந் தருதி!

நூர்ஜ. விளங்கிழை! செல்லுக!
குடைசெழு வேந்தன் கொடிமதில் கடந்தே!

(சலாபத்கான் நூர்ஜஹானோடு செல்ல)

விசுவ. துன்னுவம் வருக! தோகையே!
செந்நெலுங் கன்னலுஞ் செழித்துள நாடே!

களம்—4, அங்கம்—3 முற்றும்.

## அங்கம்—4. களம்—1.

விசுவநாதன் காஞ்சனையைச் சிறைமீட்டு விஜயநகரத்துக்கு வந்து அரசனைக்கண்டு நடந்தது விளம்ப, அரசன் காஞ்சனையை அவள் மாடத்திற்கனுப்பி மந்திரி முதலானவர்களோடு சுல்தான் அடில்ஷாவின் சூழ்ச்சிகளைப்பற்றி ஆலோஜனைசெய்துகொண்டிருந்தான். அப்போது பாண்டிவாசியொருவன் வந்து பாண்டிய நாட்டிற் சந்திரசேகரனைச் சிறைசெய்து நாகமன் சிம்மாசனம் ஏறிக் குடிகளை வருத்துந் தன்மையைப் பலவாறு எடுத்துக்கூறினான். அரசன் மிகுந்த கோபமடைந்து நாகமனைத் தண்டிக்கும் வழியைநினைத்தான். அப்போது மந்திரிகள் பலவிதமான ஆலோஜனைகள் செய்து கடைசியாக விசுவநாதனையே பாண்டிநாட்டுக்குச் சேனையுடன் அனுப்புவதாகத் தீர்மானித்தார்கள்.

## அங்கம்—4. களம்—1.

இடம்—விஜயநகரம், அரசன்கொலுமண்டபம், காலம்—நண்பகல்.

கிருஷ்ணதேவராயர். குருபக்க. சாலுவதிம்மன். இராமன் அச்சுதப்பன். விசுவநாதன் ஜீவராய். முதலானவர்கள் வீற்றிருப்ப

(பாண்டிவாசியொருவன் சபையை வணங்கி.)

(நேரிசையாசிரியப்பா.)

பாண்டிவாசி. நானிலம் புரக்கு நாயக! நாகமன்
சேனையோ டெழுந்து சேகரச் சோழனை
மாளிகை தன்னிலே மாய்வுறச் செகுத்து
மீளிபோல் மதுரை மேவிச் சந்திர
சேகரன் றனக்குச் சீர்முடி புனைந்தனன்.
சாகரஞ் சூழ்ந்த தராதல மெல்லாம்
இன்பக் கடலி லேமாந் திருந்தது.
மன்பதை பொங்கி மகிழு நாளில்,
வள்ளுவ னொன்றுநாள் மாநகர் வீதியில்
உள்ளங் கலங்க வொருபறை சாற்றினன் ;
யாதெனக் கேட்டேம் ; " இறைபித் தேறினன் ;
ஆதலிற் சிறையிட் டாதன மேறினம் ;

என்று முரச மெற்றுக யாவரும்
இன்றே யுணர" வென்றார் கட்டளைப்
படிடம் டாம்டாம் படம்டம் டாம்டாம்
அடிப்ப னென்றனன், அரச ரேறே!
இடியே றுண்ட நாக மேய்ப்பக்
கொடியோன் சாற்றுங் கூற்றுக் கஞ்சினேம்;
பாண்டியன் செய்த பாவம தாகுக;
ஈண்டிவ னேனு மின்னரு ளுடனே
அரசு புரிவனோ வறிகுவ மென்றே
விரசி யொழிகினம்; வீணிவ னீதி!

கிருஷ். ஆ! ஆ! கொடிதே! ஆரிய நாதனை
ஏவாக் கொண்ட விவன்செய் லிதுவோ?
ஞான சிகாமணி! நந்தா விளக்கு!
மானமே பூண்டு மதித்து நடக்கும்
சீரியன்! செய்கையுஞ் சிந்தையு நல்லான்!
ஆரியன்! நாதனை யருங்குல மகனுப்
பெற்ற தந்தையும் பேதுற லாகுமோ?
கொற்றமோ? நீதியோ? கோன்மொழி நிற்றலோ?
கூறுக திம்மவோ! கொடிது! கொடிது!

திம்ம. ஊறிய புகழினாய்! ஒன்னலர்ச் செகுத்து,
வீரமும் வாகையும் வேய்ந்து, வளர்ந்த
பேரணிப் படையின் பெருமிதங் கொண்டு,
ஊரரா முடிபுனை யொருவ னுண்ட
காரரூப் பொழிலு நீரரூத் தடமும்
பூசுர ராகுதி பொழிதரு சாலையும்
வாசநா றூதியர் வதியுமா லயமும்
அழகுறப் பொருந்தும் வழுதிநா டதனைத்
தன்னடிப் படுத்திய தன்மையாற் றுணைவர்
இன்னுரை கொளானாய் இதந்தேர் கிலனாய்
இருந்தனன்; செல்வ மெழுதரு மாயின்,
திருந்திய நீதியுந் தெய்வமும் பேணான்;
சுற்றமுந் துணையுஞ் சொல்லுங் கொள்ளான்;
வெற்றியே கருதுவன்; வெம்பகை யெண்ணான்;
என்பதிவ் வுலக வியல்பா மென்பர்!
தன்புகழ் துடைத்துத் தாணிப! நினக்கும்
பழியுந் தந்தனன்.

இராமன். செழியன் பித்தே
வழுதிநா டாள வழியைத் தந்தது.
நாகமன் பித்தோ நமக்கு வெற்றியும்
வாகையுந் தந்து வழுதிபித் தொழிக்கும்!
குருபக்க. அப்பு மொழிமிகச் செப்ப முடைத்தே!
கிருஷ். செப்பரும் பகைவர் சீற்ற மிக்குடைய
துருக்கர் தாமெனத் துணிந்து நின்றேன்;
விருப்புடை யாருட் விரோதி யாயினர்!
கண்மணி காஞ்சனை கடுஞ்சிறைப் பட்ட
எண்ணருந் துன்பம் இரிந்ததிக் குரிசில்
நாதன் புரிந்த நன்றியால்; நாகமன்
ஏதங் களைந்திவ் விடரைத் தொலைத்தவன்
தலையைக் கொணர்ந்து தருபவ ரிலரோ?
(சபையோர் மௌனமாயிருக்க)
விசுவ. அலைகட லுடுத்த வவனியைப் புரக்கும்
இறைவனே! யவையி லிலரோ வொருவரும்
அறநெறி கடந்த பகைவனை யடக்க?
பேசா திருப்பதும் பெருமை தருமோ?
கூசா தரசன் கொடுத்த வாணையைக்
கடந்த வெந்தையைக் கடிந்து கொணர்வான்
படர்ந்து செல்வன் படையுடன், பார்த்திப!
கிருஷ். இன்னதே வீரம்! இன்னதே வார்த்தை!
இன்னதே பெருமை! இன்னதே புகழும்!
இருந்தா ரவையோர்! எதிர்மொழி கூறிலர்!
இருந்தார் மார்ப னிவனலா தொருவர்
இப்பெருஞ் செயலை யிழைத்த லொண்ணுமோ?
ஒப்பரு மமைச்ச!
(திம்மனும் அரசனும் தனித்துரையாட.)
திம்ம. உயர்மதி யுடையான்,
நல்வழி பிறழான், நாதன்; ஆயினும்
செல்வழி யொன்னலர் சேர்ந்தவன் மதியைக்
கலைப்பர்; கலைத்தாற் கல்லுங் கரையும்.
கிருஷ் துலைமுக மொத்த தூமதி யுடையான்,
ஆதலி னுதனயன் மொழி கொள்வான்,
போதலே நன்கு!

திம்ம. போதக மனையான்

அறந்தலை நிறுத்தி யப்பனைத் திருத்தித்
திறமுற வெற்றித் திருவொடுந் திரும்பும்!

கிருஷ். (சபையோரைநோக்கி)

நாதனே செழிய னகர மேக
மேதகை யோனென விளம்பின னமைச்சன்;
எமக்கு மதுவே யெண்ணம்; அவையோர்
தமக்கு மிதுவே தகைத்த கருத்தென
தோற்றும்; ஆதலின், (விசுவநாதனை நோக்கி)
நன்றமலே! யின்னே
ஆற்றற் படையுட னணிவகுத் தேகுக,
உந்தை மறத்தொழி லொழிந்து,
செந்தமிழ் நாடு சிறப்புற் றோங்குகவே!

களம்—1 முற்றும்.

## அங்கம்—4. களம்—2.

விசுவநாதனும் அவ்வாறே சென்று சோழவந்தான் பக்கத்துத் தங்கினன். நாகமன் தன்குமாரன் வரவைக் கேட்டு அவன் தாய் மங்கம்மவைத் தூதனுப்பினான். மங்கம்ம விசுவநாதனை அவன்கொண்ட கருத்தினின்றும் மாற்றத் தன்னால் ஆன அளவும் முயன்றுபார்த்தாள். விசுவநாதன் இராஜபக்தியும் தருமசிந்தனையுமுள்ளவனாதலால் இணங்காமல் தாய்க்கு இதோபதேசம் கூறிவிலக்கினான். தன்கருத்து இயலாதென்று கண்டு தாயும் மதுரைநோக்கிச் சென்றனள்.

## அங்கம்—4. களம்—2.

இடம்—சோழவந்தான்புறத்து இறுத்தபாசறை. காலம்-மாலை.

விசுவ. (தனியேநின்று)

(நிலைமண்டிலவாசிரியப்பா.)

உலகெலாம் புகழ வுடம்பெடுத் தவர்கள்
அலகிலா விளையாட் டாடுமோ ரீசன்
அமைத்த வறநெறி யாற்றிநின் றூரே

சமைந்தமா தவரெனச் சாற்றும் பெரியோர்!
அடியேற் குலக வனுபவம் பலவாம்;
முடிதரித் துலகை முறையினோ டாளும்
மன்னவ ரவையு மாந்த ரீட்டமுந்
துன்னலர் படையும் சூழ்ச்சியும் வஞ்சர்
கூட்டமுஞ் சீரியர் குழுவும் பற்பல
நாட்டி னியற்கையு நன்குணர்ந் துள்ளேன்;
மாக்க ளுழலும் வல்விருட் கானில்
ஊக்க முடனிருந் துலவுகா மாதி
வருத்தும்; அப் பேய்கள் வசப்பட் டார்பலர்.
கருத்தற நெறியிற் கலந்து தூண்ட
நன்மையே யிழைத்தவர் நல்லவ ரென்பதே
என்மனத் தெழுந்த விசைப்பருங் காட்சி!
ஆதலின், யானு மன்னவர் காட்டில்
போதச லமைந்தும், புன்னெறி புகாமல்
நன்னெறி நாடி நலங்கொளக் கருதினன்:—
என்னவென் றுரைப்பேன்? எழிலார் மாடமும்
தோரண வீதியுந் தோகைவாழ் பொழிலும்
ஆரண மோது மந்தண ரிருக்கையும்
தமிழினை வளர்க்குஞ் சாலையுஞ் செறிந்த
அமிழ்தினு மினிய வகன்புனல் வையை
வளநா டுற்ற வான்பெருஞ் செல்வம்
உளநா டுற்றதா லுயரறந் துறந்து
மன்னவ னாணையு மறந்து சரண்புகு
தென்னவன் றனையுஞ் சிறையிடை வைத்தான்
தந்தை; அன்னவன் றனையடக் கென்று
கந்தடு களிற்றுக் காவல னென்னை
விடுத்தனன்; வந்தேன். வெம்போர்க் களத்தில்
படுத்துவ தோவெனைப் பயந்த தந்தையை?
துறப்பதோ வாணை? தொன்மை யறத்தை
மறப்பதோ கொடிது! மன்னவன் பார்த்தன்
தந்தையுந் தமையனுந் தம்பியர் பலரும்
வித்தைகற் பித்த வில்லா சிரியனும்
ஆர்வ மிக்க வரசரு நிறைந்த
போர்முனை நின்று மொருவ தொழிந்து

வருந்த வன்னவன் மயக்க மொழிந்து
திருந்த, மாயவன் செப்பிய மொழியை
யாவரே மறப்பர் ? ஆதலி னவழி
காவல னிட்ட கட்டளைப் படியே
நிற்ற லறனென நினைந்து நின்றனன் !—

(ஓர்வீரன் பிரவேசம்)

வீர. வெற்றிவே லிறைவ ! விழைந்துனைப் பெற்ற
தாய்மணிச் சிவிகை தனிலமர்ந் திங்கு
வாயிலில் இறங்கி வரவுரை யென்றனள்.

(மங்கம்ம உள்ளேவர)

விசுவ. (பணிந்து) அம்ம ! வருக ! அலகிலா நாட்க
ளும்மைப் பிரிந்தேன்.

மங்க. உனைப்பிரி துயரால்
நானும் வருந்தினன், நாதனே ! மதுரை
மாநக ருறுது வழியிடை நின்றனே ;
ஏனிது ? தந்தையு மிரங்கி நின்றனன் !

விசுவ. கோனெழிற் படைதனைக் கொண்ட ஜீவராய்
தந்தையைப் பொருது தரும நெறியை
புந்தியிற் புலப்படப் புகல வந்தனன் ;
அவனுடன் போந்தன னன்னையே !

மங்க. அப்பனே !
எவனுடன் பொருவது ? எவனவன் பொருவது ?
ஏனவன் பொருவது ?

விசுவ. எந்தை நன்னெறி
தானகன் றுனெனத் தராபதி கேட்டுச்
சீவ ராயனைச் சேனையோ டனுப்பினன்.

மங்க. ஆவ தென்னினி ?

விசுவ. அரும்போர் விளையும் !

மங்க. நீயும் போரிடை நீற்ற லமையுமோ ?

விசுவ. ஆயே ! அறநெறி யாற்றலே கடனும்.

மங்க. தந்தைக் கறன்வழி தனயன் பகர்வதோ ?
விந்தை ! விந்தையே ! வேண்டாம் ! கேளாய் !
உலகியல் முற்று முன்னிலு மறிந்தவர் ;—
நலனெனக் கொண்டு நயந்து செய்தனர் ;
ஆதலின், போர்த்தொழி லகற்றி யுன்றன்
தாதையோ டிணங்கித் தாரணி காக்குஞ்
செல்வம் பெறுதி.